# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஆவணங்கள் பதிவு (திருத்தம்)

**ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தினை (அத்தியாயம் 117)**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **229 ஆம் சட்டமூலம்** ]


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

### சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2:** இவ்வாசகம், விதித்துரைக்கப்படவேண்டிய கட்டணங்களுக்காக ஏற்பாடு செய்து (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) (117 ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 3:** இவ்வாசகம், விதித்துரைக்கப்படவேண்டிய கட்டணங்களுக்காக ஏற்பாடு செய்து முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 4:** இவ்வாசகம், ஒழுங்கு விதிகள்மூலம் கட்டணங்களை விதந்துரைப்பதற்கு அனுமதியளித்து முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 5:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களைத் திருத்துவதன் மூலம் முதலாம் அட்டவணையைத் திருத்துகின்றது.

ச.வ.ஓ-18/2013

## (117 ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

**1.** இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க ஆவணப் பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம் என்பதுடன் 2013 சனவரி 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 117) இன் 13 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.*

**2.** (இது இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (117 ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (6) ஆம் உபபிரிவு “ ஐந்து ரூபா கட்டணம்” என்ற சொற்களுக்குப் பதிலாக, “ஐந்து ரூபாக் கட்டணம் அல்லது அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகை” என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “பதிவுக்காக ஐந்து ரூபாக் கட்டணம் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.” என்ற சொற்களுக்குப் பதிலாக, “ஐந்து ரூபாக் கட்டணம் அல்லது அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகை பதிவுக்காகச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.” என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவினை பதிலீடு செய்தல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆம் பிரிவு, அப்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

“கட்டணம்.

**48.** அமைச்சரினால் காலத்துக்குக் காலம் விதந்துரைக்கப்படக் கூடியவாறாக முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்

கள், அவை எக்கருமங்களுடன் தொடர்புபட்டுள்ளனவோ அக்கருமங்களுக்ககாச் தொடர்பான விடயங்களுக்காக செலுத்தப்படற்பாதனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையினைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணை பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அட்டவணையின் I ஆம் பகுதியில் -

(i) அதன் (6) ஆம் விடயத்திற்குப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

''(6) தடையெச்சரிக்கையில் விவரிக்கப்பட்ட ஒவ்வொரு காணிக்கும், ஒவ்வொரு காணி தொடர்பிலுமான ஒவ்வொரு தடையெச்சரிக்கையும் எந்தக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த ஒவ்வொரு காணிப் பதிவகத்துக்கும், இரண்டாண்டுகளைக் கொண்ட ஒவ்வொரு காலப்பகுதிக்குமான கட்டணம் 2,500.00".

(ii) அதன் (9) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(9) வெளிப்படையாக விலக்களிக்கப்படாத எந்தவொரு வகையானதுமான ஒவ்வொரு சாதனத்துக்குமான கட்டணம் 100.00".

(iii) அதன் (10) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(10) 29 ஆம் பிரிவின்கீழ் பதிவாளர் தலைமையதிபதிக்கு முன்வைக்

| | |
|---|---|
| கப்பட்ட சாதனமொன்றுக்கு, செலுத்தப்படற்பாலதான வேறே தேனும் கட்டணத்துக்கு மேலதிக மான கட்டணம் | 1,000.00". |

(2) அட்டவணையின் III ஆம் பாகத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| "பாகம் III | ரூபா. ச. |
|---|---|
| 1. உறுதிகளின் இணைப்பிரதிகள், சாதனங்கள் அல்லது ஆவணங்கள் அல்லது ஒப்படைக்கப்பட்ட பிரதிகள் என்பவற்றைப் பார்வை யிடுவதற்கான, அத்தியாயங்கள் II, III, IV, V, VI என்பவற்றின்கீழ் ஏதேனும் புத்தகத்தை அல்லது சுட்டியைப் பார்வையிடுவதற்கான விண்ணப்பமொன்று, தேடுதல் எந்தக் கொடுக்கல் வாங்கல் அல்லது கருமம் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அக்கொடுக்கல் வாங்கல் அல்லது கருமம் ஒவ்வொன்றுக்குமான கட்டணம் | 500.00 |
| 2. பின்வருவனவற்றுக்கான விண்ணப்பங்கள்:- | |
| (அ) ஏதேனும் காணி தொடர்பான ஏதேனும் உறுதியிலிருந்தான பிரதிகளுக்கான அல்லது பிரித்தெடுத்த பகுதிகளுக்கான கட்டணம் | 500.00 |
| (ஆ) ஏதேனும் காணி தொடர்பான ஏதேனும் பக்கத்திலிருந்தான அல்லது பக்கங்களிலிருந்தான பிரதிகள் அல்லது பிரித்தெடுத்த பகுதிகளுக்கான கட்டணம் | 100.00 |

3. பிரிவு 43 (2) இன்கீழான தடையெச்சரிக்கை தவிர, ஒரு முடிவுறாத வழக்கு, முன்னுரிமை அறிவித்தல், கைப்பற்றுகை முன்னுரிமை அறிவித்தல் என்பவற்றின் பதிவுபற்றிய புறக்குறிப்பை வழங்குவதற்காக, பதிவின்மீது செலுத்தப்பட்ட அதே கட்டணம்.".

செல்லுபடியாக்குதலும் நட்டோத்தரவாதமும்.

**6**. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1ஆந் தேதியிலிருந்து 2013, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடையும் வரை, பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட எவையேனும் கட்டணங்கள், பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினால் செல்லுபடியான முறையில் விதிப்பனவு செய்யப்பட்டதாக அல்லது சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப் பகுதியின் போது விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் கட்டணம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்